## சுருக்கம்

சிலை – திருச்சிராப்பள்ளி மாநகராட்சி– திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பொன்மலை கோட்டத்திற்குட்பட்ட வில்லியம்ஸ் ரோடு மற்றும் பென்வெல்ஸ் ரோடு இணையும் இடத்தில் உள்ள போக்குவரத்து முக்கோணத் திடலில் சுதந்திர இந்தியாவின் முதல் பாரதப் பிரதமர், பாரத ரத்னா பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுடைய சிலையை அமைத்திட அனுமதி வழங்கி ஆணையிடப்படுகிறது.

-------------------------------------------------------------------------------------------------------------

## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந2) துறை

**அரசாணை (நிலை) எண். 176** **நாள்:16.9.2008**

**படிக்கப்பட்டது :**

1) அரசாணை (நிலை) எண்.221, நநிமகுவ (நநி5) துறை, நாள் 20.11.98
2) மாவட்ட ஆட்சித் தலைவர், திருச்சிராப்பள்ளி அவர்களின் கடித எண். ந.க.2420/2008(23) நாள் 23.7.08
3) ஆணையாளர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ந.க.எண். எப் 1/9783/2007/மையம் , நாள் 12.8.2008

-----

**ஆணை:**

இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர், திருச்சிராப்பள்ளி, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, பொன்மலை கோட்டத்திற்குட்பட்ட வில்லியம்ஸ் ரோடு மற்றும் பென்வெல்ஸ் ரோடு இணையும் இடத்தில், சேவா சங்கம் பெண்கள் மேல்நிலைப்பள்ளி எதிரில் உள்ள போக்குவரத்து முக்கோணத் திடலில் சுதந்திர இந்தியாவின் முதல் பாரதப் பிரதமர், பாரத ரத்னா பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுடைய முழு உருவ வெண்கலச் சிலையை நிறுவிட மாநகராட்சி அனுமதியை கோரி, சிலை அமைப்புக்குழு தலைவர் திரு.வி.கல்யாணராமன், என்பவர் விண்ணப்பம் செய்துள்ளதாகவும் இதற்கு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மாமன்றம் ஒப்புதல் வழங்கி தீர்மானம் எண்.48, நாள் 28.2.2008–ல் அனுமதி அளித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

2) மேலும், மாவட்ட ஆட்சித் தலைவர் தமது கடிதத்தில் திருச்சிராப்பள்ளி மாநகர காவல் துறை ஆணையர் பிரஸ்தாப இடத்தில், முன்னாள் பாரதப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு, அவர்களின் சிலையை அமைக்க தடையின்மைச் சான்று வழங்கியுள்ளனர் எனவும், பிரஸ்தாப இடத்தில் மேற்படி சிலையினை அரசின் அனுமதியுடன் நிறுவிட தடையின்மைச் சான்று வழங்கலாம் என திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையர் பரிந்துரை செய்துள்ளார் எனவும், மேற்படி பிரஸ்தாப இடத்தில், இந்தியாவின் முதல் பாரதப் பிரதமர், பாரத ரத்னா, பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுடைய முழு உருவ வெண்கலச் சிலை அமைக்க அரசு அனுமதி வழங்கி ஆணை பிறப்பிக்கலாம் எனத் தெரிவித்துள்ளார்.

3) திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மாமன்றத் தீர்மானத்தையும், திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரையினையும் அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, பொன்மலை கோட்டத்திற்குட்பட்ட வில்லியம்ஸ் சாலை மற்றும் பென்வெல்ஸ் சாலை இணையும்

இடத்தில், சேவா சங்கம் பெண்கள் மேல்நிலைப்பள்ளி எதிரில் உள்ள போக்குவரத்து முக்கோணத் திடலில் சுதந்திர இந்தியாவின் முதல் பாரதப் பிரதமர், பாரத ரத்னா பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுடைய முழு உருவ வெண்கலச் சிலையினை அமைப்பதற்கும் மற்றும் பராமரித்து பாதுகாப்பதற்கும் திருச்சி பாரத ரத்னா பண்டித ஜவஹர்லால் நேரு குழுவிற்கு, அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

/ ஆளுநரின் ஆணைப்படி /

கே.தீனபந்து,
அரசு முதன்மைச் செயலர்.

பெறுநர்
திரு.வி.கல்யாணராமன்,
தலைவர், பாரத ரத்னா பண்டி ஜவஹர்லால் நேரு சிலை
அமைப்புக் குழு, 5–7, 3வது தளம், ஆர்.டி.ரெசிடன்சி,
முதல் மெயின் ரோடு , ராமலிங்க நகர், திருச்சி–620 003.
மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருச்சிராப்பள்ளி.
ஆணையாளர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, திருச்சிராப்பள்ளி
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5,
மாண்புமிகு முதலமைச்சரின் செயலரின் தனிச்செயலர்,சென்னை–9.
மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சரின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
நகல்
பொது(ச(ம)ஒ) துறை, சென்னை –9
நநிமகுவ (நநி5/மாந1/அந2) துறை
இருப்புக் கோப்பு/உதிரி நகல்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்.